229

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 3. Vol 3. | வெகுதான்யஹூ கார்த்திகைமீ நவம்பர்—1938 | இதழ் 8. No. 8.

திருப்புகழ்.

பழநி—(திருவாவினன்குடி)

கடலை பொரியவரை பலகனி கழைநுகர்
கடின குடவுதர விபரீத
கரட தடமுமத களின சிறுநயன
கரிணி முகவரது துணைவோனே
வட வரையின்முகடு அதிர வொருநொடியில்
வலம்வரு மரகத மயில்வீரா
மகபதி தருசுதை குறமினொ டிருவரு
மருவு சரசவித மணவாளா
அடல சுரர்கள்குல முழுது மடியவுய
ரமரர் சிறையைவிட எழில்மீறும்
அருண கிரணவொளி யொளிரு மயிலைவிடு
மரகர சரவண பவலோலா
படல வுடுபதியை யிதழி யணிசடில
பசுபதி வரநதி அழகான
பழ நிமலையருள்செய் மழலை மொழிமதலை
பழநி மலையில்வரு பெருமாளே.

பதவுரை.

கடலை பொரி அவரை பல கனி கழைநுகர் - கடலை பொரி அவரை பலவகையான பழங்கள் கரும்பு முதலியவைகளையுண்ணும், கடின குட உதர - உறுதியாகிய குடத்தையொத்த அழகியவயிற்றையும், விபரீத கரட தட மு மத - மிகவும் விசாலமாக கவுள் முதலிய இடங்களினின்றும் பொழியும் மும்மதங்களையும், நளின சிறு நயன - தாமரை யொத்த சிறு கண்களையுமுடையவராகிய, கரிணி முகவரது துணைவோனே - யானைமுகத்தை யுடைய விநாயகமூர்த்தியின் சகோதரரே ! வட வரையின் - மேருமலையின், முகடு அதிர - கொடுமுடிகள் அதிரும்படி, ஒரு நொடியில் வலம் வரு - (எல்லா வுலகங்களையும்) ஒருநொடிப்பொழுதில் வலம் வந்த, மரகதமயில் வீரா-மரகதம் போல் ஒளி விட்டு ஒளிர்கின்ற பச்சைமயில் வாகனத்தையுடையவரே ! மக பதி தரு சுதை - யாகங்களுக்குத் தலைவனாகிய தேவேந்திரன் பெற்ற தெய்வ யானையம்மை, குறமினொடு - குறவர் குடியிற் பிறந்து மின்னலைப்போல் ஒளிரும் வள்ளியம்மை - இருவரும் மருவு - இரு தேவியரும் இரு மருங்கிலும் அணைந்திருக்க, சரசவித மணவாளா - இனிமையாக விளையாடிக்கொண்டிருக்கும் மணவாளரே ! அடல் அசுரர்கள் குலம் முழுதும் மடிய-வலிமையுடைய இராக்கதர்களுடைய குலமுழுவதும் அடியோடழிந்து போகவும், உயர் அமரர் சிறையை விட - நற்குணங்களாற் சிறந்த தேவர்கள் சிறைச்சாலையை விட்டு நீங்கி இன்புறுமாறும், எழில் மீறும் - அழகு மிகுந்து விளங்குவதும், அருணகிரண ஒளி ஒளிரும் அயிலை விடும் - உதய சூரியனது கிரணங்களின் ஒளியைப்போல் மிகவும் பிரகாசிக்கின்ற வேலாயுதத்தை விட்டருளிய, அரகர - அரன் என்னுந்திருநாமத்தையுடையவரே ! சரவண பவ - சரவண தடாகத்தில் திருவவதாரம் புரிந்தவரே ! லோலா - திருவிளையாடலைச் செய்பவரே !, உடு படல பதியை - நட்சத்திரக் கூட்டங்களுக்குத் தலைவனாகிய சந்திரனையும், இதழி - கொன்றை மலரையும், அணி சடில- அணிந்துகொண்டுள்ள சடைமுடியை யுடையவரும், பசுபதி - ஆன்மாக்களுக் கெல்லாம் தனிப் பெருந்தலைவருமாகிய சிவ பெருமானும், வர நதி- மேன்மையைத்தருகின்ற கங்கா தேவியும், அழகான பழ நிமலை - கட்டழகுடையவரும் ஆதிபராசத்தியும் மலசம்பந்தமில்லாதவருமாகிய உமாதேவியும் (ஆகிய இம்மூவரும்), அருள் செய் - திருவருளால் பெற்றெடுத்த, மழலை மொழி மதலை - மழலை மொழிகளைச் சொல்லும் இளங்குமாரரே !, பழநி மலையில் வரு பெருமாளே - பழநி என்னும் திருமலையில் எழுந்தருளிள்ள பெருமித முடையவரே

பொழிப்புரை.

(அடியார்கள் அன்புடன் படைக்கும்) கடலை, பொரி, அவரை, பலவகையான பழங்கள், கரும்பு, முதலியவைகளை யுண்ணுகின்ற உறுதியான குடத்தைநிகர்த்த திருவயிற்றையும், மிகவும் விசாலமாகப் பொழிகின்ற மும்மதங்

களேயும், தாமரைக்குநிகரான சிறிய கண்களேயுமுடைய ஆனைமுகப் பெருமானது இளைய சகோதரரே ! மகாமேருவின் கொடுமுடிகள் "கிடு கிடு" என்று அதிரும்படி ஒருநொடிப்பொழுதுக்குள் உலகங்களேஎல்லாம் வலம்வருகின்ற மரகதம்போன்ற பச்சைக்கலாப மயில்வாகனத்தையுடையவரே ! நூறு அசுவமேத யாகங்களைச்செய்து மகபதியென்ற பேருடன் இந்திரபதவிக்கு வந்த தேவர் கோமானிடம் புதல்வியாகத் தோன்றிய தேவகுஞ்சரியம்மையும், குறவர்களிடம் தோன்றி மின்னலைப்போல் பிரகாசிக்கும் வள்ளியம்மையும் இருமருங்கில் மருவிக் கொண்டிருக்க இனிய லீலைகளைப்புரியும் நாயகரே ! வல்லபத்தின்மிக்க அசுரர்களது குலம்யாவும் அழியவும், நற்குண நல்லொழுக்கத்தின் மிக்க தேவர்கள் சிறையினின்று நீங்கி இன்புறவும், மிகவும் அழகியதும் உதய சூரியனது கிரணங்களைப்போல் சிவந்த ஒளியை வீசித்திகழ்கின்றதுமாகிய ஞானவடிவேலை ஏவியருளிய அரமூர்த்தியே, சரவணப் பொய்கையில் திருவவதாரம் புரிந்தவரே ! அருள்விளையாடலைப் புரிபவரே! நட்சத்திரக்கூட்டங்களுக்குப் பதியாகிய சந்திரனையும் கொன்றை மலரையும் சடைமீது அழகாக அணிந்துள்ளவரும் பசுக்களுக்குப் பதியுமாகிய சிவபெருமானும், வரங்களைத்தரும் கங்காநதியும், பெருவனப்புடையவரும் ஆதிபராபரியும் மலரகிதரும் ஆகிய உமாதேவியாரும் பெற்றருளிய மழலை மொழியையுடைய இளங்குமாரரே ! பழநிமலைமிசை எழுந்தருளியுள்ள பெருமையின்மிக்கவரே!

விரிவுரை.

கடலை பொரி :—கடலை பொரி அவல் பழங்கள் கரும்பு முதலியவைகள் சத்துவகுணத்தை உண்டாக்கும். உணவுகளின் பேதத்தாலேயே குணபேதங்கள் உண்டாகின்றன. புல் தழை முதலியவைகளையுண்ணும் ஆடு மாடு அணில் முதலிய பிராணிகள் சாந்தமாகவும் பிறருக்கு தீங்குசெய்யாமலும் இருப்பதையும், எந்நேரமும் மாமிசவுணவையுண்ணும் புலி சிங்கம் கரடி முதலிய பிராணிகள் மிகுந்த அச்சத்தை யுண்டாக்கி துன்பத்தைச் செய்துகொண்டிருப்பதையும் உற்றுநோக்குக. மேற் கூறிய பிராணிகட்கு உணவுகளின் வேற்றுமையாலேயே நற்குணமும் தீயகுணமும் உண்டாயின. விநாயகமூர்த்தி புத்தி சொரூபர் ; ஆதலால் அவருக்கு அடியார்கள் மேற் கூறிய சத்துவகுணப் பொருள்களை நிவேதிக்கின்றனர். அப்பெருமான் நமக்குள் மூலாதாரத்தில் எழுந்தருளியிருப்பதால் சத்துவகுணப் பொருளை ஏற்று நமக்கு சத்துவகுணத்தை வழங்குகின்றார்.

குட உதர :—சகல உலகங்களும் சகல உயிர்களும் அவருடைய வயிற்றில் அடங்கியிருக்கின்றன என்னும் குறிப்பை யுணர்த்துகின்றது விநாயகருடைய பெருவயிறு ; ஆதலால் அது கும்பம்போல் அழகாகவும் பெரிய தாகவும் அமைந்திருக்கிறது.

மு மத :---இச்சை கிரியை ஞானம் என்ற மூன்றுசத்திகளையும் மூன்று மதங்களாக உடையவர்.

சிறு நயன :---யானைகளுக்குக் கண் சிறியது ; யானைமுகமுடையவ ராதல்பற்றி - "சிறுநயன" என்றார்.

வடவரையின்......வலம்வரு :---முருகன் கனிகாரணமாக உலகை வலம் வந்தது. இவ்வரலாற்றை திருப்புகழமிர்தம் மலர் 1, பக்கம் 4ல் காண்க.

அரகர :---சங்கரனே ஷண்முகன் ; சிவனுக்கும் குகனுக்கும் பேத மில்லை. ஐம்முகச் சிவனாரது பழையவடிவு ஆறுமுகம் : ஆதலால் அரன் எனும் திருநாமத்தால் முருகனை யழைக்கின்றார்.

காங்கேய கார்த்திகேயாதி நாமபி : பரமேச்வர :
நிகத்யதே முநிச்ரேஷ்டைர் மூடாபிந்நதயாவிது :

முதல்வன்புராணம்.

பொருள் :---காங்கேயன் கார்த்திகேயன் முதலிய திருப்பெயர்கட்குப் பரமேசுவரனென்பதுதான் பொருளென்பது முனிச்சிரேட்டர் கொள்கை : மடவோர்தாம் பேதம் பேசுவார் என்பது.

"சிவசிவ அரகர தேவா நமோ நம
திரிபுர மெரிசெய்த கோவே நமோ நம
ஜெய ஜெய அரகர தேவா சுராதிபர் தம்பிரானே."

திருப்புகழ்.

பசுபதி :=சிவபெருமான் ஒருவரே சகலலோகங்கட்கும் சகல உயிர்களுக்கும் பதியாவர். மூவர்களும் தேவர்களும் உயிர்களும் பசுக்களேயாவர்

பதியரன் பாசந்தன்னிற் பட்டுழல் பசுநாமென்றே
விதியொடு மறைகள்கூறு மெய்ம்மையைத் தெரியவேண்டி
னிதுவென வுரைப்பன் யாங்க ளிவ்வர சியற்ற வீச
னதிர்கழ லருச்சித்தேத்து மாலயம்பலவுங் காண்டி

கந்தபுராணம்.

சிவபெருமான் ஆன்மாக்களாகிய பசுக்களுக்குப் பதியாதலால் பசுபதி என்னுந் திருநாமத்தையுடையவராயினர். இதனை அடியிற் காணும் வேதவசனத்தாலுங் கண்டுதெளிக.

"உமாபதயே பசுபதயே நமோநம.:"

தைத்திரீயாருண நாராயணவல்லி.

வரநதி ..... பழ நிமலை யருள் ;—முருகப்பெருமான் சிவ மூர்த்திக்கும் கங்காநதிக்கும் பார்வதிதேவிக்கும் புதல்வராக இருந்து தமது மழலைமொழியால் அவர்களை மகிழ்விக்கின்றார்.

" புரக்குஞ் சங் கரிக்குஞ் சங்
கரர்க்குஞ் சங் கரர்க்கின்பம்
புதுக்குங் கங் கைபட்குந்தஞ் சுதனானும்."
திருப்புகழ்.

கருத்துரை.

விநாயக மூர்த்தியின் துணைவரே! உலகை ஒருநொடியில் வலம்வரும் மயில்வாகனரே! கஜவல்லி வனவல்லி சமேதரே! அசுரரையழித்து தேவர் சிறை மீட்ட வேற்படையினரே! சரவணபவ! சிவமூர்த்திக்கும் சுரநதிக்கும், கௌரியம்மைக்கும், திருப்புதல்வரே! பழனுபுரிப் பெருமாளே.

குறிப்பு :---இத்திருப்புகழ் முழுதும் துதியாகவே அமைந்துள்ளது வேண்டுகோள் ஒன்றுமில்லை.

நெடுங்காலம் உயிருடன் வாழ்ந்திருக்கும்முறை.

ஒவ்வொருநாளும் அதிகாலையில் துயிலைவிட்டு எழுந்திருக்கவேண்டும். தூக்கந்தெளிந்தவுடனே படுக்கையில் புரண்டுபுரண்டு படுத்திருக்காமல் படுக்கையைவிட்டெழுந்திருக்கவேண்டும்.எழுந்தவுடனே வேலைசெய்யவேண்டும். உண்ணும்போது துரிதப்படாமல் உணவை நன்றாக மென்று மெல்ல உண்ணவேண்டும். நாள்தோறும் இரண்டுமணிநேரம் நடக்க வேண்டும். அமிழ்தமாயிருந்தாலும் அளவறிந்து உண்ணவேண்டும். உண்டஉணவு ஜீரணமாகிப் பசித்தபின் புசிக்கவேண்டும். தாகந்தணிவதற்கு வேண்டுமளவைக் கடந்து தண்ணீரைப்பருகலாகாது. அவசியமாக இருந்தால்மட்டுமேவார்த்தைசொல்ல வேண்டும். எத்துணை முக்கியமாயிருந்தாலும் சொல்லவிளைப்பதில் பாதிக்குமேல் சொல்லலாகாது. ஒப்புக்கொண்டு கையெழுத்துப் போடத்தக்கது எவ்வளவோ அவ்வளவைமட்டுந்தான் எழுதவேண்டும். எவற்றைவெளியே சொல்ல அச்சமுண்டாகுமோ அவற்றைச் செய்யா தொழியவேண்டும். மற்றவர்கள் நம்மை நம்பி யிருக்கிறார்க ளென்பதையும், நாம் மற்றவர்களை எதிர் பார்த்திருக்க லாகாதென்பதையும் நாம் மறக்க வொண்ணாது. பணத்தினிடத்தில் வைக்கும் மதிப்புக்கு ஒருஅளவு இருக்கவேண்டும்.

(தொடரும்).

ஓம் குஹாய நம :

சிவானந்த லஹரீ

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(209-வது பக்சத் தொடர்ச்சி).

(22) ப்ரலோபாத்யைரர்தாஹரணபரதந்த்ரோ தநிக்ருஹே
ப்ரவேசோத்யுக்த : ஸந் ப்ரமதி பஹுதா தஸ்கரபதே|
இமம் சேதச்சோரம் கதமிஹ ஸஹே சங்கரவிபோ
தவாதீநம் க்ருத்வா மயி நிரபராதே குரு க்ருபாம்.||

பதவுரை.

சங்கர - சுகத்தைத் தருகின்றவரே!
தஸ்கரபதே - திருடர்களுக்குத்தலைவரே!
விபோ - எங்கும் நிறைந்திருக்கின்றவரே!
ப்ரலோபாத்யை:- பேராசை முதலியவைகளால்,
அர்தாஹரண பரதந்த்ர : -(பிறருடைய) பொருள்களைக் கவர்ந்து வருவதில் பராதீனமான அடியேனுடைய மனதாகிய திருடன்,
தநிக்ருஹே - செல்வமுள்ளவர்களுடைய வீட்டில்,
ப்ரவேசோத்யுக்த : ஸன் - புகுதற்கு முயற்சியுடையவனாகிக் கொண்டு,
பஹுதா - அநேகவிதமாக,
ப்ரமதி - சுற்றுகிறான்,
இமம் - இந்த,
சேதச்சோரம் - என்மனதாகிய திருடனை,
இஹ - இப்பொழுது,
கதம் - எவ்விதமாய்,
ஸஹே - (அடியேன்) பொறுப்பேன் (ஆதலால் இம்மனக்கள்வனை)
தவ - தேவரீருக்கு,
அதீனம் - உரியதாகச்
க்ருத்வா - செய்துகொண்டு,
நிரபராதே - குற்றமற்ற,
மயி - அடியேனிடத்தில்,
க்ருபாம் - கருணையை,
குரு - செய்தருள்வீர்.

பொழிப்புரை.

ஓ சிவபெருமானே! பேராசை முதலிய தீயகுணங்களால் பொருள்பறித்தலிலேயேநினைவாயிருக்கும் அடியேனுடையமனதாகிய திருடன், பணக்காரர்கள் வீட்டிற்புகுவதில் முயற்சியுடை

பவனும் பலபலவாறு திரிகின்றான். இக்கள்வனை அடியேன் எவ்வாறு பொறுப்பேன்? அவனை உமது வசமாகச் செய்துகொண்டு குற்றமில்லாத அடியேனிடத்தில் கருணைசெய்தருள்வீர்.

(23) கரோமி த்வத்பூஜாம் ஸபதி ஸுகதோ மே பவ விபோ
விதித்வம் விஷ்ணுத்வம் திஸஸி கலு தஸ்யா : பலமிதி|
புனச்ச த்வாம் த்ரஷ்டும் திவி புவி வஹன் பக்ஷிம்ருகதா
மத்ருஷ்ட்வா தத்கேதம் கதமிஹ ஸஹே சங்கரவிபோ.||

பதவுரை.

விபோ - எங்கும் நிறைந்தவரே,
சங்கர - சுகத்தைத்தருகின்றவரே,
த்வத் பூஜாம் - தேவரீரது பூஜையை,
கரோமி - அடியேன் செய்கின்றேன்.
ஸபதி - உடனே,
மே - அடியேனுக்கு,
ஸுகத - பிரம்மானந்தசுகத்தைக் கொடுக்கிறவனாக,
பவ - ஆகிவிடு,
தஸ்யாம் - அந்த பூஜைக்கு,
பலமிதி - பயனென்று,
விதித்வம் - பிரமனாயிருத்தலையாவது,
விஷ்ணுத்வம் - விஷ்ணுவாயிருத்தலையாவது,
திஸஸிகலு - கொடுத்தால்,

புனச்ச - மறுபடியும்,
திவி - ஆகாயத்திலும்,
புவி - பூலோகத்திலும் (பாதலத்திலும்),
த்வாம் - தேவரீர் (அடியையும் முடியையும்),
த்ரஷ்டும் - பார்க்க,
பக்ஷி ம்ருகதாம் - பறவை (அன்னம்) நாற்கால் மிருகம் (பன்றி) இவைகளின் தன்மையை,
வஹன் - வகிக்கின்றவனாகி,
அத்ருஷ்டா - தேவரீரது (அடிமுடியை,) காணாமல்,
தத்கேதம் - அந்தத்துக்கத்தை,
கதம் - எவ்விதமாய்,
ஸஹே - பொறுப்பேன்.

பொழிப்புரை.

ஓ சிவபெருமானே! தேவரீருடைய திருவடியைப் பூசிக்கும் அடியேனுக்கு என்றுமழியாத பேரின்பப் பெருஞ்சுகத்தைப் பலனாகத் தந்தருள்வீராக. பிரமனாகவும் திருமாலாகவும் ஆகும் பதவியை நான் விரும்பேன். ஏனெனில், அவர்களைப்போல் அன்னரூபத்தையும் பன்றிரூபத்தையும் எடுத்து, மேலும் கீழும் சென்று, தேவரீரது முடியையும் அடியையும் காணாமல் அதனால் வரும் துக்கத்தை அடியேன் பொறுக்கவல்லேனல்லேன்.

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு." மணிவாசகர்.

(24) கதா வா கைலாஸே கனகமணிஸௌதே ஸஹ கணைர்
வஸன் சம்போரக்ரே ஸ்புடகடிதமூர்தாஞ்ஜலிபுட :।
விபோ ஸாம்ப ஸ்வாமின் பரமசிவ பாஹீதி நிகதன்
விதாத்ரூணாம் கல்பான் க்ஷணமிவ விநேஷ்யாமி ஸுகத.:।

பதவுரை.

கைலாஸே - திருக்கைலாயமலையில்,
கனகமணி ஸௌதே - தங்கத்தினால் கட்டப்பட்டதும் நவமணிகள் பதிக்கப்பட்டதுமாகிய மாடிமேல்,
சம்போ - பரமசிவனுடைய,
அக்ரே - முன்னிலையில்,
கணைஸ்ஸஹ - பிரமதகணங்களுடனே,
வஸன் - வசிக்கிறவனையும்,
ஸ்புடகடித மூர்தாஞ் ஜலிபுட : - பிரகாசிக்கும் படியான தலைமேல் கூப்பப்பட்ட கரத்துடன் கூடிய அடியேன்.
விபோ - எங்கும் நிறைந்தவரே !
ஸாம்ப - அம்பிகையுடன் கூடியவரே !
ஸ்வாமின் - எல்லாவற்றையும் உரிமையாக உடையவரே !
பரம - எல்லோருக்கும் மேலானவரே !
சிவ - மங்களத்தைச் செய்பவரே !
பாஹீதி - காப்பாற்றுவீர் என்று,
நிகதன் - சொல்லுகின்றவனாய் ,
ஸுகதா - சுகமாக,
விதாத்ருணாம் - அநேக பிரமர்களுடைய,
கல்பான் - கல்பங்களை,
க்ஷணமிவ - ஒரு நொடிப்பொழுதைப் போல்,
கதாவா - எப்பொழுதுதான்,
விநேஷ்யாமி - போக்குவேனோ?

பொழிப்புரை.

எம்பெருமானே ! தேவரீரது திருக்கைலாயமலையில், பொன்மணிமயமான மேடைமேல் பிரமத கணங்களுடன் கூடி, தேவரீருடைய சந்நிதானத்தில் நின்று, இருகரங்களையும் உச்சிமேற் கூப்பி, ஓ சம்போ ! சங்கர ! சிவசிவ ! காப்பாற்றியருள்வீர் என்று துதித்துக் கொண்டு, அந்தச் சுகானுபவத்தால் அநேகபிரமகற்பங்களை ஒருகணப்பொழுதாக எப்போது கழிக்கப் போகிறேனோ ?

“ ஆவல் கூரு நண்ப என்றும் மாமயூர கந்த என்றும்
ஆவல் தீர என்று நின்று புகழ்வேனோ” திருப்புகழ்.

(தொடரும்).

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(216-வது பக்கத் தொடர்ச்சி.)

சிவ பெருமானிடம் அளவற்றவரங்களைப் பெற்றசூரபன்மனை அசுர சேனைகள் வந்துசூழ்ந்து பணிந்து துதித்துநின்றார்கள். இந்திராதி இமையவர் நடுங்கினார்கள். மேருகிரியை ஏழுகடல்களும் சூழ்வதுபோல் சூரனை அவுணர்கள் சூழ்ந்துகொள்ள, சூரபன்மன் தம்பியருடன் காசிபமுனிவரை வந்து வணங்கி, தாம்பெற்ற வரங்களைக் கூறி, "யாம் செய்வது என்னை?" என்றுவினவினான். காசிபர் தேவர்கள் வாழ்வுதீர்ந்தது, என்று எண்ணி, "உங்கள்குருவாகிய சுக்கிரரிடம் போங்கள்," என்று விடை கொடுத்தனுப்பினார். சூரபன்மன் தன் சேனைகளுடன் சுக்கிராசாரியரிடம் வர, அவர் எதிர்கொண்டு ஆசீர்வாதங்களைச் செய்தனர். சூரபன்மன், தான்தவஞ்செய்ததும் வரம்பெற்றதும் கூறி "இனிச்செய்யத்தக்க நீதிகள் எல்லாவற்றையும் உபதேசிக்கவேண்டும்" என்று வேண்ட, அவர் உபதேசிப்பாராயினர்.

"பதி பசு பாசம் என்று முப்பொருளுள வென்று சிலர் கூறுவர். பதியும் பசுவும் ஒன்றே. முத்தியென்பது ஒன்றில்லை, பாவ புண்ணியம் இல்லை. எதைச்செய்யவேண்டுமென்றாலும் செய்யலாம் மறுபிறப்பு இல்லை. நீயே பிரமம். பிரமவிட்டுணு முதலியோரை வணங்காதே; தேவர்கள் உனக்குப் பகைவர்கள்; அவர்களுடைய செல்வத்தைக் கவர்ந்து தண்டிப்பாய். இந்திரனைச் சிறையில்வை. மனம் விரும்பியபடி எல்லாம் செய். ஆயிரத்தெட்டண்டங்களையும் பார்த்து ஏவல் கொண்டு வருவாய்" என்று உபதேசித்தார். அண்டங்களின் பரப்புக்களையும் கூறினார். அதுசமயம் மாயையும் வந்து மக்களைக்கண்டு வாழ்த்தி, "தேவர்களை வென்று எல்லாவுலகங்களையும் ஆளுதிர்; மாயைகள் வேண்டினால் என்னை நினை

யுங்கள் பான்வருவேன்" என்று கூறிச்சென்றாள், சூரபன்மன் சேனைகளுடனும் துணைவர்களுடனும் திக்கு விஜயத்திற்குச் சென்று, குபேரனையும், இந்திரனையும், அக்கினியையும், இயமனை யும், நிருதியையும், வருணனையும், வாயுவையும் வென்று ஈசானதிக் கிற்சென்று ஈசானருத்திரர் என்று அவரைவிட்டு நீங்கி, நாகருலகஞ்சென்று ஆதிசேடன் முதலியோரை வென்று திசை கள் எல்லாவற்றையும் தன்வசமாக்கிக் கொண்டு புகழை நாட்டி, திருமால் பள்ளிகொண்டுள்ள பாற்கடலை யடைந்தான்.

அவுணப்படைகள் பாற்கடலைக்கலக்கின. திருமால் துயிலை விட்டு நீங்கி சினங்கொண்டு கருடன் மீது ஏறி பெருமழை போல் அசுரர் மீது பாணங்களைப் பொழிந்தார். அசுரசேனைகள் பல மடிந்தன. தாரகன் கோபித்து திருமாலுடன் நெடுநேரம் போர்புரிந்தான். இருவரும் மாயவடிவங்களைத்தாங்கி நான்கு நாள் போர்புரிந்தார்கள். தாரகன்தேரைத் திருமாலழித்தனர். தார கன் வெகுண்டு தண்டாயுதத்தை ஏந்தி அண்டங்கள் நடுங்க விட்டுணுமூர்த்தியை எதிர்த்துவந்தான். திருமால் விடுத்த கணை களை எல்லாந்தடுத்துவர, திருமால் சக்கரத்தைவிட்டார். அது அவன் கழுத்தில் செம்பொன்னாரமாக விழுந்தது. அவன் தவத்தின் பெருமையைக் கண்ட திருமால் வியப்புற்று, அவனைச் சமாதா னம்புரிந்து, "உனக்கு நிகரானவர்கள் ஒருவருமில்லை. நின் தமை யன்மாரைப்பற்றி புகழவல்லார்யாவர்? நீடூழிகாலம்வாழ்க" என்று வாழ்த்திவிட்டு நீங்கினார்.

சூரபன்மன் சுவர்க்கம் செல்ல, இந்திரன் பயந்து இந்திராணி யுடன்குயிலுருக்கொண்டு ஓடிஒளிந்தான். தேவர்கள் அனைவரும் சூரனைப்பணிந்து ஏவல் செய்வாராயினார்கள். சூரன் பிரம லோகஞ்செல்ல, நான்முகக்கடவுள், சூரபன்மன் முன்வந்து பல ஆசி கூறி, "நான் உனது பாட்டன்; விட்டுணுமூர்த்தியை வென்ற உன்னை வெல்லவல்லார் ஒருவருமில்லை. நீ நெடுங்காலம் வாழ்ந்திரு" என்று வாழ்த்தி, தனதுபடைக்கலங்களை சூரபன்மனுக்கும் அவன் தம்பியர்களுக்கும் தந்து நீங்கினார். சூரபன்மன் பிறகு திருக்கைலாசமலைக்குச் சென்று, அனைவரையும் நிறுத்தி தம்பியர்க ளுடன், திருநந்தி தேவரிடம் விடை பெற்று உள்ளே சென்று, உமாதேவியையும் சிவபெருமானையும் பணிந்து துதித்து நிற்ப,

சிவபெருமான் கருணைசெய்து, "அண்டங்களை யெல்லாம் நின் ஏவலைச் செலுத்தி இனிது அரசாண்டிருப்பாய" என்று அருளிச் செய்தார். சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் சென்று பார்வையிட்டு அங்குள்ளவரை வென்று, அங்கெல்லாம் அசுரரைத் தலைவராக நிறுவி பூமண்டலத்திற்கு எய்தினன். சுக்கிரருடன் அசுரேந்திரன்வந்து சூரபன்மனைக்கண்டு உறவுகொண்டாடி மகிழ்ந்தான்.

பிரமன் முதலிய தேவர்களும் முனிவர்களும் பாற்கடலிற் புகுந்து, அறிதுயில் செய்யும் அரவணைச் செல்வனை வணங்கி, சூரபன்மனால் நேர்ந்த துன்பத்தைக்கூறி முறையிட்டார்கள். திருமால் "நாம் தக்கனுடைய யாகத்தில் இருந்த தீமையால்வந்த துன்பம் இது. இதனை விலக்கவல்லார் யாவர்? சூரபன்மன் சிவபெருமானிடம் அளவில்லாத வரங்களைப் பெற்றவன். அவனை வெல்லவல்லாரில்லை. அவனைப்போய் கண்டுவருவோம்," என்று கூறி, பிரமன் இந்திரன் முதலியோருடன் புறப்பட்டு சூரனுக்கு எதிரேபோய் ஆசிர்வதித்து நின்றார்கள். பதினொருகோடி உருத்திரர்களும் சென்று ஆசிகூறினர்கள்.

சூரபன்மன் ஏவல்கொண்டு தெய்வத்தச்சன் தென்கடலின் நடுவில், எண்பதினாயிரயோசனை விரிவுடையதாய், செம்பொற் கோபுரங்கள் வானளாவியும் மதில் அரண்மனைகள் மாடமாளிகைகள், பொன்னெடுந்தெருக்கள் உடையதாய், அதன் நடுவில் எல்லா வகையிலுஞ் சிறந்த பெரிய நவரத்தின மாளிகையும் உண்டாக்கி "வீரமகேந்திரபுரம்" என்ற பெயரைத்தந்தான். வடகடலில் சிங்கமுகனிருக்க "ஆசுரம்" என்ற நகரை உண்டாக்கினன். நாவலந்தீவில் ஏமகூட மலைக்கு ஓர் புறத்தில் தாரகனிருக்க "மாயமாபுரம்" என்ற நகரை உண்டாக்கினன். இன்னும் பற்பல நகரங்களை அவுணசேனைகள் இருத்தற்பொருட்டு உண்டாக்கினன். வீரமகேந்திரபுரியைச் சூழ எண்டிசையினும் ஏமபுரம், இமையபுரம், இலங்கைபுரம், நீலபுரம், சுவேதபுரம், அவுணர்புரம், வாமபுரம், பதுமபுரம் என்னும் நகரங்களை யுண்டாக்கினன். சூரபன்மன் நல்லநாளிற் குடிபுகுந்தான்.

பிரமன் முதலியதேவர்கள் "சூரபன்மனுக்கு முடிசூட்டுதும்," என்று, அதற்கு வேண்டிய உபகரணங்களை வருவித்தார்கள்.

சூரபன்மன் நீராடி, பீதாம்பரத்தை உடுத்து, மலர் சூடி, ஆபரணங்களைப்பூண்டு, தம்பியர் இருமருங்கும் வர, அவுணர்களும் அமரர்களுந்துதிக்க சிங்காதனத்தில் ஏறினன். அப்பொழுது பிரமதேவர் மணிமகுடத்தை எடுத்துச் சூட்டினர். அவுணர்கள் ஆரவாரஞ்செய்து வணங்கினர்கள். தேவர்களும் முனிவர்களும் பொன்மலர்களைத் தூவினர்கள். "இருங்கள்" என்று சொன்ன பின் பிரமாவும் திருமாலும் இருந்தனர். இந்திரன் காளாஞ்சியை ஏந்தினன்; குபேரன் அடப்பையைத்தாங்கினன்; வாயுசாமரை வீசினன்; அசுரேந்திரன் உடைவாள் பிடித்தான்; சந்திர சூரியர்கள் குடையை நிழற்றினர்கள்; வருணனும் புத்திரர்களும் ஆலவட்டம் வீசினர்கள்; கருடரும் கந்தருவரும் சித்தரும் இசைபாடினர்கள்; யமனும் அக்கினியும் பிரம்பை ஏந்தி எவரையும் விலகும்படி கோபத்துடன் பார்த்து ஆரவாரித்துப் பத்தியாக நிறுத்தி சூரபன்மனைப் புகழ்ந்து துதித்து நின்றார்கள்; நிருதி கெண்டியை ஏந்தினன்; தேவகுருவும் அசுரகுருவும் முனிவர்களும் பொற்கலத்திலுள்ள கங்கை நீரை அறுகிற்றோய்த்துத் தூவி ஆசிகூறினர்கள்; மேனகை முதலிய தெய்வப் பெண்கள் ஆடிப்பாடினர்கள்; இவ்வாறு தேவரும் பிறரும் ஏவல் செய்ய சூரபன்மன் ஒப்பாரும் மிக்காருமின்றி அரசு செய்வானயினன்.

சூரபன்மன் விட்டுணுவை நோக்கி, "நீ என் பிதாவாகிய காசிபமுனிவருக்குப் பாட்டன் ஆதலால் உன்னை நாம் அழைக்குந்தோறும் விரைந்து வருக" என்றும், பிரமாவை நோக்கி "உன் புத்திரர்களோடு எந்நாளும் இங்குவந்து பஞ்சாங்கஞ் சொல்லிப் போகுக" என்றும், சூரியனை நோக்கி, "கீழ்மேற் கோபுரவாயிலில் நுழைந்து ஆகாயத்திற்போய் எந்நாளும் இளங்கதிராய் இருத்தி" என்றும், சந்திரனைநோக்கி, "இனிவளர்தல் தேய்தலின்றி பூர்ணகலையோடு இங்குசஞ்சரிக்குதி" என்றும், அக்கினியைநோக்கி "நம்மூரிலுள்ளவர்கள் யாவர்நினைத்தாலும் அவரிடத்துவந்து அவர் பணிகளைச்செய்துயாவர் தீண்டினும் செந்தாமரைபோல் குளிருதி" என்றும், யமனைநோக்கி "நம்முடைய யானை குதிரைகளையும் அசுரர்களையும்கொல்வதை கனவிலும் கருதாதிருத்தி" என்றும், வாயுவை நோக்கி "வீதிகளிலுள்ள புழுதிகளை நீக்குதி" என்றும்

"வருணனைநோக்கி வீதிகளில் சந்தனம் பன்னீர் முதலியவைகளைத் தெளிக்குதி" என்றும், இந்திரனைநோக்கி "தேவர்களோடுவந்து நாம் சொல்லிய பணிகளைச் செய்துத் திரிவாய் என்றும் இவ்வாறே யாவர்க்கும் கட்டளையிட்டான். அவர்கள் தொழுது அப்பணியில் நிற்பாராயினர்கள்.

பிறகு சூரபன்மன் தெய்வத்தச்சனுடைய மகளாகியபதுமகோமளையைவிதிப்படி மணந்துகொண்டான். இன்னும் தேவகந்தருவர் முதலிய பல சாதிப்பெண்களைக் காமக்கிழத்தியர்களாகக் கொண்டு இன்புற்றான். சிங்கமுகனுக்கு யமனுடைய மகளாகிய விபுதையையும், தாரகனுக்கு நிருதியின் மகளாகிய சவுரியையும் மணஞ் செய்துவைத்து, அவர்களை அவர்கள் நகரத்தில் இருக்க வைத்தான்.

விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் ஏழ்பிலங்களிலும் எண்டிசைகளிலும் வீரமகேந்திரத்தைச்சூழ்ந்துள்ள எட்டுபுரங்களிலும் அசுரசேனைகள் நட்சத்திரங்கள்போல் சூரனுடையகட்டளைப்படி இருந்து வந்தார்கள். தேவர்களும் முனிவர்களும் சூரனுடைய நகரிலும் சிங்கமுகனுடைய ஆசுரத்திலும் தாரகனுடைய மாயாபுரியிலும்சென்று அவர்கள்ஏவியஏவலைச்செய்துஊசல்போல் நாடோறும் அலைந்துஇருந்தனர். சூரபன்மன் இந்திரனையழைத்து, "நீதேவர்களோடு மீன்களைப்பிடித்துவந்து நாள்தோறும் கொடுக்கக் கடவாய்" என்று பணித்தான். இந்திரனும் இமையவரும் தங்கள் விதியைநொந்து "கற்பகத்தருவின் கீழ் வாழும் வாழ்க்கை நீங்கி வலைஞர்போல் மீன்பிடிக்கக் காலம்வந்ததே" என்று வருந்தி நாள்தோறும் மீன்களைப்பிடித்துவந்து கொடுத்து வருந்தினர்கள்.

சூரபன்மன் இவ்வாறு தேவரை ஏவல்கொண்டு அரசுபுரிந்து வருநாளில், அவன்செய்ததவத்தினால் பதுமகோமளை என்னும் பட்டத்துத் தேவியிடத்தில் ஒருபுதல்வன்பிறந்தான். சூரன்மகனைக் கண்டு மகிழ்ந்து விழாக்கொண்டாடி பொன்மழைவீசி தொட்டிலிட்டனன். அச்குழந்தை ஒருநாள் தொட்டிலில் தூங்கும்போது நாழைவழியாகவந்து சூரிய கிரணம்தாக்கியது. உடனே அம்மைந்தன் சினந்து ஆகாயத்திற் பாய்ந்து சூரியனைப்பிடித்து இழுத்து வந்து தொட்டிலின் காலிற்கட்டி முன்போல் நித்திரை செய்வானாயினன். விண்ணில் விரிசுடரோனின்மையால் விண்ணவர்

வருந்தி, நான்முகக்கடவுளிடம்கூற, அவர்தேவருடன் வந்து சூரனிடம் சூரியனைச்சிறைவிடுமாறு வேண்டினார். சூரன்கேட்டு தன் மகனுடையவீரச்செயலுக்கு மகிழ்ந்து, "நீவிர் என்மகனைவேண்டி இன்சொல்கூறி விடுவித்துக் கொண்மின்" என்றுகூற, பிரமதேவரும் ஏனையதேவர்களும், அரம்பையர்கள்பாடப் பொற்றொட்டிலில் கிடக்கின்ற மைந்தனிடம் வந்து, நல்லாசிகள் பலகூறி சூரியனைச் சிறைவிடுவிக்க வேண்டுமென்று வேண்டினார்கள். புதல்வன் "பிரமதேவரே! உமது படைக்கலத்தைத் தருவீராயின் விடுவிப்பேன்" என்ன, அவர்தன்படைக்கலத்தைநல்க, சூரியனைக் கட்டவிழ்த்து விட்டனன். அக்காரணம்பற்றி தன்மகனுக்கு சூரன் பானுகோபன் என்று பேரிட்டுவளர்த்துவந்தான். பிறகு சூரனுக்கு அக்கினிமுகன், இரணியன், வச்சிரவாகு என்ற மூன்று புதல்வர் பதுமகோமளையிடம் பிறந்தார்கள். ஏனையமனைவியரிடமும் மூவாயிரம் மக்களைப்பெற்றான்.

சிங்கமுகன் விபுதை என்னும் பட்டத்துத் தேவியிடம்அதிசூரன் என்னும் மகனையும், மற்றமனைவியரிடம் நூறுமைந்தர்களையும் பெற்றான். தாரகன் சௌரி என்னும் பட்டத்துத்தேவியிடம் அசுரேந்திரன் என்ற மகனைப்பெற்றான். அப்புதல்வன் சகலநற்குணங்களுக்கும் உறைவிடமாயிருந்தான். கலைகளை ஓதியுணர்ந்தான், பாவகாரியங்களைச் செய்யான், தருமமல்லாதவற்றை நினைக்கவு மாட்டான். கள்ளிஅகிலைத்தந்தாப்போல் தாரகன் இந்தநற்புதல்வனைப் பெற்றான். எல்லாப்புதல்வர்களும் ஆற்றலின் மிக்கவர்கள். காலனுக்குங்காலர்களாக-சிறந்தவீரர்களாக இருந்தார்கள்.

---(தொடரும்).

நெடுங்காலம் உயிருடன் வாழ்ந்திருக்கும்முறை.

நாம் சொன்னபடி எல்லாம் பணஞ்செய்ய வேண்டுமே யல்லாது பணஞ் சொன்னபடி யெல்லாம் நாம் நடப்பது கூடாது. பிராணவாயுவை அதிகமாக செலவழிக்கப்படாது. இரவில் எழுமணிநேரம் தூங்கவேண்டும். சாப்பிட்டவுடனே கடினவேலையைச் செய்தல் கூடாது. உடலிலுள்ள அழுக்குகள் நீங்கநன்றாக நீராடுதல். அவ்வாறு நீராடுங்கால் தலையொழித்துச் செய்யப்படாது. ஈமப்புகை படாமலிருத்தல். மனத்தை அடிக்கடி கவலையில் அழுத்தாமலிருத்தல். அடிக்கடி இறைவனை நினைத்து மனம் சாந்தியடைதல்.

ஓம் குஹாய நம :

கற்பு

(222-வது பக்கத் தொடர்ச்சி).

கணவன் மனைவியை நடத்தும் முறை

உலகத்தில் பெரும்பாலோர் கலியாணம் செய்துக்கொள்வதை சாமான்ய விஷயமென்று நினைக்கின்றார்களேயன்றி, அது இம்மைக்கும் மறுமைக்கும் இன்பத்தைத்தரும் சிறந்த சாதனமென்று உணர்கின்றார்களில்லை. கலியாணத்தை "ஆயிரங்காலத்துப்பயிர்" என்பது நம்நாட்டுப் பழமொழி. ஒருவன் தன் வாழ்க்கைத் துணையாகிய மனையாளை மணந்துக்கொள்ளும்போது நன்றாக ஆராய்ந்து பார்த்து செய்யவேண்டும். கணவன் மனைவியிடம் மிகவும் அன்புடனும் ஆதரவுடனும் இருக்கவேண்டும். மனைவியை பட்சமாகப் பார்த்துக் காப்பாற்றுகின்ற பொறுப்பை கணவன் நன்கு மேற் கொள்ளவேண்டும்.

ஒருத்தி தான்பிறந்தநாள் முதல் எத்தனையோ சீருஞ் சிறப்புமாகத் தன் தாய் வீட்டில் சுகமே வளர்கின்றாள். அவ்வாறான பெண்ணை ஒருவன் தனக்கு இல்லாளாக விரும்பி அவள் தாய் தந்தையரிடம் சென்று அவளைத் தனக்குத் தருமாறு வருந்திக்கேட்டதன்மேல், அவர்கள் தங்கள் மகளுடைய மனங்கோணாமல் அவளை அன்பாய் வைத்து ஆதரிப்பான் என்ற நம்பிக்கையுடன் அவனுக்குத் தங்கள் மகளை உறவினர் நண்பர் அனைவருமறிய மேள தாளங்களோடு நல்ல நேரத்தில் மணஞ்செய்து கொடுக்கின்றார்கள். ஒரு பெண் பிறந்தவீட்டில் எவ்வளவு தான் செல்வமாய் வளர்ந்தாலும், கலியாணமானபின் அவள் தாய் வீட்டைவிட்டுத் தன் கணவன்பின்னேடு செல்வதைத் தவிற வேறொன்றுமில்லையல்லவா ? மனைவி தான் பிறந்தநாள் தொடங்கி பழகிய வீட்டையும், அன்புடன்பெற்று அழகானபேரிட்டு வளர்த்த தாய்தந்தைகளையும், தோழிமார்களையும், உடன்பிறந்தார்களையும், தனக்குப் பிரியமான பொருள்களையும், பிறவற்றையும் விட்டுவிட்டு தான்மட்டும் தன் கணவன் ஒருவனே தஞ்சம் என்று அவனைப்பின்பற்றி அவனைத் தொடர்ந்து கணவன் வீட்டிற்கு வருகின்றாள். அவளுக்கு அங்கே பார்த்த முகமெல்லாம் வேற்றுமுகந்தான். தொட்டதெல்லாம் புதியனவே. மாமன் மாமிகளிடம் பயம் ; நாத்தி ஓரகத்திகளிடம் அச்சம். சற்று அயர்வாயிருந்தால் படுக்கவும் அச்சம். இத்துணைத்துன்பத்தையும் பொருள்படுத்தாது எல்லாவற்றையும் மறந்து தன் கணவன் அருகிலிருப்பது ஒன்றே தனக்கு பெரிய இன்பமென்று மகிழ்ச்சியுடனிருக்கின்றாள். தாய் வீட்டைமறந்து விடுகின்றாள்.

இத்தகைய அருமை மனைவியை ஒருவன் எவ்வளவு மேலாக நடத்த வேண்டும்? ஆண்மக்கள் நன்ருக இதனைநோக்குக. சில ஆண்மக்கள் தங்கள் மனைவியரை மிருகத்தினும் கீழ்மையாக நினைத்துத் துன்புறுத்துகின்ருர்கள். சிலர் மனைவியை சிறுகுற்றத்திற்கெல்லாம் பெருஞ்சினங் கொண்டு உதிரங் காணும் படி நையப்புடைக்கின்ருர்கள்; அந்தோ! பரிதாபம். ஒருத்தி ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டவுடன் அவள் தனக்குள்ள எல்லாவற்றையுந் துறந்து கணவனே கதியென்று, அவனை நம்பி அவன் பிறகே நீங்கா நிழல்போல் செல்லுகின்ருள். தாய் தந்தை சகோதரன் சகோதரி நண்பர் பழகிய வீடு முதலிய எல்லாச்சுகமும் கணவனே என்றும், "கொண்டானின் துன்னிய கேளிர் பிறரில்லை" என்றபடி கணவனைவிட உயர்ந்த உறவு இல்லை என்றும் எண்ணி, வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் அவனிடம் இன்பதுன்பங்களில் பங்கெடுத்துக்கொள்ளுகிருள். தாய்வீட்டில் மன்ருடி சண்டைபிடித்துங்கூட நகை சீலை பாத்திரங்கள் முதலியவற்றை வாங்கிக்கொண்டுவந்து கணவன் வீட்டில் சேர்த்து மகிழ்கின்ருள். இவற்றை எல்லாம் ஆடவர்கள் சிந்தித்துப் பார்த்து மனைவியை மறக்காம லிருக்கவேண்டும்.

அநேக ஆண்மக்கள் கற்பின்மிக்க மனைவியின் முகத்தைப்பாராமல், ஒழுக்கந்தவறி விலைமாதரையும் பிறமாதரையும் சேர்ந்து மகிழ்கின்ருர்கள். என்னே பேதமை? கணவனே கதியென்று நம்பிய காரிகையைக் கைவிடுதல் தருமமா? கணவன் மகிழ்ந்தால் மனைவிமகிழ்கின்ருள்; கணவன் துன்புற்ருல் தான் துன்புறுகின்ருள். தன்னைக்கண்டு கணவன் சிறிது புன்சிரிப்புக் கொண்டால் அதுவே தனக்குப் பேரின்பமென்று எண்ணுகின்ருள். இத்தகைய மனைவியினுஞ்சிறந்த பந்து வேறு உண்டோ? மனைவி எப்படி தன்னை மிக்க உள்ளன்புடன் நேசிக்கின்ருளோ அப்படியே கணவன் மார்கள் மனைவியை உள்ளன்புடன் நேசிக்கவேண்டும். மனைவி எப்படி தன்னைத்தவிர வேறு ஒரு ஆடவனை விரும்பமாட்டாளோ அப்படியே கணவனும் மனைவியைத் தவிர வேறு ஒருத்தியை விரும்பக்கூடாது. எவ்வளவுக் கெவ்வளவு கணவனும் மனைவியும் தேனும் பாலும்போல் ஒற்றுமையாயிருக்கிருர்களோ அவ்வளவுக் கவ்வளவு அந்தக்குடும்பம் பெருமை பெற்றிருக்கும். மனைவியிடம் கணவன் அன்பாயிருத்தல்வேண்டும். தவறுவது என்பது யாவர்க்கும் இயல்பு. மனைவி அறியாமையால் ஏதேனும் குற்றமிழைத்தாலும் கணவன் அதனைப்பொறுப்பது கடனுகும். மனைவிக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால் அதனைநீக்கி ஆதரிப்பவர் கணவனைத்தவிர உலகில் வேறு யாருண்டு? தேவர்களுக்கும் பெரியோர்களுக்கும் நடுவேநின்று அக்கினி சான்ருக, "உன்னை அறம்பொருள் இன்பத்தில் என்றும் உன்னைத் தொடர்ந்து அனுசரித்திருப்பேன்" என்று கைபிடித்து மணஞ்செய்து கொண்டமனைவியை காப்பாற்ருவிடில் ஆண்மக்களுக்குத்தான் என்ன பெருமையுண்டு? குடும்பத்தில் எத்தனையோ இன்னல்கள் இடையிடையே வரும். அவ்வின்னல்களை தன் அறிவாலும் யுக்தியாலும் நீக்கி சீர்பெற நடத்த வல்லவனே ஆண்மகனுவான். கணவனும் மனைவியும் இருக்கின்ற ஒற்றுமையைக்கண்டு வியந்து "நாமும் இவ்வாறு இருக்கவேண்டும்" என்று

எண்ணும்படி நடக்கவேண்டும். தாய் தந்தையர் குணத்தைக் கண்டு மக்களும் அதனைப்பின்பற்றி நடப்பார்கள். ஆதலால், கணவன் மனைவியர் இருவரும் தங்கள் மக்கள் நல்வழிப்படும் பொருட்டாவது தாங்கள் எப்பொழுதும் நன்னெறியினின்றும், சிறிதும் பிறழாதிருக்கவேண்டும். கல்யாண சமயத்தில் உப்பள்ளி "உன்னை ஒருபோதும் பிரியவிடேன் ; உன்னை என்றும் கைநெகிழவிடேன்" என்றெல்லாம் சத்தியம் செய்துக் கொடுத்த வாக்கியங்களுள் ஒன்றையும் கணவன் மறக்கலாகாது. பெண்கள் எத்துணைச் சிறந்த கல்வி கேள்விகளுடையராயினும், ஆடவர்க்குள்ள தைரியமில்லை யாதலால், ஆபத்துக்காலங்களில் அவர்களைக் காக்கவேண்டுவது ஆண்மக்களுடைய சிறந்த கடனேயாகும்.

ஒருவன் ஒருத்தியை மணந்தபின் நாளுக்குநாள் அவனுக்கு அவளிடத்தில் அதிக அன்புண்டாவதே வாழ்க்கைக்கு அழகாகும். மனைவியின் மனங் கோணாமல் நடக்கவேண்டும். ஏழை அழுத கண்ணீர் கூரியவாளாகுமாதலினால், ஒருவன் தன்னுடைய கற்புடை மட நல்லாளைக் கண் கலங்கும்படி இம்சித்தால் அவன் குடும்பங்கலங்கிவிடும். உயிரும் உடலும்போல் உள்ள நாள் வரை ஒருவரை ஒருவர் பிரியாமல் கருத்தொருமித்திருப்பதே அனுகூல தாம்பத்யம் எனப்படும். "தாய்க்குப்பின்தாரம்" என்பது பழமொழியாதலால், மனைவியினும் நெருங்கிய உறவினரில்லை. ஊசிபோனவழியே நூல்போவதுபோல் கணவன் போனவழியே செல்லுவது மனைவியின்கடமை. அப்படி தன்னை எல்லாக்காரியத்திலும் பின்பற்றுகின்ற மனைவியைப்பேணி உணவு உடைகளைத்தந்து உபசரித்து இன்புறுத்துவது கணவன் கடமை.

கணவனும் மனைவியும் எந்தவீட்டில் ஒருமனப்பட்டு நடக்கவில்லையோ அந்தவீட்டில் ஒருநாளும் சுகமாவது மகிழ்ச்சியாவதுஇருக்காது. ஆண்களுக்குள்ளே பெரும்பான்மையாய்த் தங்களுக்கு நல்ல மனைவியாய் அமையவேண்டுமென்று ஆசைப் படுகின்றார்களே யன்றி, அன்புள்ள கணவனாகவேண்டுமே என்ற எண்ணம் வருவதேயில்லை. அநேக ஆண்கள் தாங்கள் அமாவாசையைப் போல் இருந்தாலும் சிவப்புநிற முடைய மனைவியைத் தேடுகின்றார்கள். தங்கள் நிறந்தோன்றுவதில்லை. சிவந்த மனைவியைத் தான்நேசிப்பதுபோல் அவள் தன்னைநேசிக்க வேண்டுமே என்று எண்ணுவதேயில்லை. நிறம் சிவப்பாயென்றுகருதுகின்றார்களே யன்றி,குணம் சிவப்பாயுளதா?என்று கருதுவதில்லை. மனைவி பிறபுருடனைப்பார்க்கப்படாது என்றுஎண்ணுகின்ற ஒருஆடவன் தான் பிறமாதரைப்பார்ப்பது முறையா ? ஒவ்வொருவரும் தன் மனைவி தன்மேல் மிக்க அன்புடையவளாயும், அழகியவளாயும், துன்பங்களை யெல்லாம் எளிதில் போக்கவல்லவளாயும், தன்னைப் போற்றுபவளாயும், பொறுமையில் பூமியை யொத்தவளாயும், சொன்னபடி எல்லாம் கேட்பவளாயும், கற்பு நிலைதவறாதவளாயும், தான் கொடும்பாவியானாலும் தன் இஷ்டப்படி நடப்பவளாயும், குணவதியாயும் வாய்க்கவேண்டுமென்று நினைக்கின்றார்கள் தாமும் ; அதற்குத் தக்கவாறு நடக்கவேண்டு மென்று நினைப்பதேயில்லை. மனைவியரிடத்து உள்ளன்பு பாராட்டி அவர்களது நலத்தை நாடுகின்றவர் உலகில்சிலரேயாம்.

சிலர் மனைவியர்கட்கு உணவு உடைக்குக் குறைவில்லாமல் உடல் நிறைய நகைப்பூட்டிவிட்டால் அவ்வளவோடு தமது கடமை முடிந்துவிட்டதாக அமைதியடைகின்றார்கள். உலகில் எந்த உயிர்தான் உணவு உண்டு உயிர்வாழ வில்லை? மனைவி தன்னைப்போல் பகுத்தறி வுடையவளாயும், தன்குடும்பத்தை உயர்த்தி வளர்க்க வாழச்செய்ய வந்தவளாயும் இலக்குமிதேவியின் அமிசமான வளாயும்,இன்பதுன்பத்தில்பங்கெடுத்துக் கொள்ளத் தக்கவளாயும் இருத்தலால், அவளை இங்கித மறிந்து இனிமையாக நடத்த வேண்டும். சிலர் மனைவியரை ஆடுமாடுகளைக் காட்டிலும் கேவலமாக நடத்துவதுமுண்டு. சிலர் மனைவிக்கு இருக்கிறதா இல்லையா என்று கூட பார்க்காமல் கண்டமட்டும் விலாப்புடைக் கத்தின்று விட்டுப் போவதுண்டு. சிலர் மனைவி சாப்பிட்டாளா இல்லையா என்றுகூட கவனிப்பதில்லை. சிலர் மனைவிக்கு எவ்வளவு உடல் நலங்குன்றி யிருந்தாலும் தமக்கு ஆகவேண்டியதைக் குறைவின்றி செய்துமுடிக்கவேண்டும். சிலர் மனைவியரைப் படுத்தும்பாட்டை அவர்கள் பொறுக்க முடியாமல் தற் கொலை செய்து கொள்வதுமுண்டு. நற்குடியிற் பிறந்த உத்தமிகளாயின் தற் கொலை செய்துக்கொள்வது பெரும்பாவமென்று அஞ்சி, தமது கணவன் செய்யுங் கொடுமைகளை வெளியில் தூற்றுவதும் பாவமென்று எண்ணி, அய லறிவிக்காமல் மனதிலேயே எண்ணி எண்ணி இடிந்து, "ஆனையுண்ட விளாங்கனிபோல்" நலிந்து அரை உடம்பாய் தேய்ந்து மாய்ந்து போவதுண்டு. சிலர் தாம் தீயநடக்கை யுடையவராதலால் தமது மனைவியரையும் சந்தேகித்து ஒரு சிறிதும் நம்பாமல் வீட்டில் வைத்து (மிருகங்களை அடைத்து வைப்பது போல்) பூட்டி வைப்பதுமுண்டு. சிலர் குழம்பில் சிறிது உப்பு குறைந்திருக்கி னும் அதைப் பெருங்குற்றமாக எண்ணி சண்டையிட்டு சாப்பிடாமல் எழுந்து போய்விடுவது முண்டு. இவை போன்ற பல கொடுமைகளை சில ஆண்கள் செய்வதை நோக்க கருணையுடையோர் மனம் ஏன் துடிக்காது.

கணவன் மனைவிக்கு செய்ய வேண்டிய தெல்லாம் அவளிடத்தில் அன்பா யிருப்பது ஒன்றேயாம். பொழுது புலர்ந்தது முதல் ஊரடங்கும்வரை ஆயிரம் பாடுபட்டும் தன்கணவன் கருத்தின்படி நடக்கவேண்டு மென்பதையே விரதமாக உடைய ஒருத்திக்கு, அவள் கணவன் உள்ளன்பு மாறாதிருப் பானேயாயின் அவளுக்கு அதனினுஞ்சிறந்த பேறு வேறுண்டோ? கணவன் தன்னைப்பார்த்து சிறிது புன்சிரிப்பு செய்தால் அதுவே தனக்கு பெரும்பாக் கியம் என்று மனைவி எண்ணுகின்றாள். ஒருத்தி எவ்வளவு குபேரசம்பத்தில் பிறந்து இந்திரவாழ்வில் வீற்றிருந்தாலும், தன்னைக் கொண்ட கணவன் தன் னிடத்தில் அன்பாயிராமலும், இனிமையாகப் பேசாமலுமிருந்தால் அந்த வாழ்வு அவளுக்கு அணுத்தும் பயன்தராது. கணவன் மனைவியிடத்தில் எவ்வளவுக் கெவ்வளவு நல்லன்பு காட்டிவருவானோ அவ்வளவுக்கவ்வளவு மனைவியி னிடத்து அன்பு ஒழுக்கம் ஊக்கம் சாந்தம் அழகு முதலிய நற்குணங்களும் நிலை பெற்றிருக்கும். இவ்வாறான கருத்தொருமித்த காதலருக்குப் பிறக்கும் மக்களும், மாந்தம் முதலிய நோய்களின்றி நல்லதிடனும் உறனுமுடையவர்களா

யிருப்பதோடு, கண்ணுக்கினிய கவினும், குலப் பெருமையைவளர்க்கும் குணமுமுடையவர்களாய் விளங்குவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

எந்தக் குடும்பத்தில் கணவன் மனைவியை அன்புடன் பாதுகாத்து வருவானோ அதில் என்றும் முட்டுவராது. எவ்வளவு கொடிய பஞ்சம் வந்தாலும் அவன் மனைவி அதற்கு அஞ்சாது, "காடிக் கஞ்சியென்றாலும் மூடிக்குடிப்பதே நலம்" என்பதை மறவாமல் கௌரவமாய்க் குடும்பத்தை நடத்திவருவாள். அவள் முகம் எந்த ஆபத்து வந்தபோதும் வாடாது. செந்தாமரைப்போல் மலர்ந்திருக்கும். அவளுடைய குளிர்ந்த முகத்தைப் பார்க்கும் போதே பசியாறும். அப்படிக்கின்றி கணவன் மனைவியைக் கொடுமையாய் நடத்திவருவானேயாயின் அவள் முகஞ் சோர்ந்திருக்கும்; அவளுக்கு கணவனைக் கண்டால் வேப்பங்காயாக இருக்கும். அவ்வாறே அவள் கணவனுக்கும் அவளைக்கண்டால் எட்டிக்காயாகக் கசந்திருப்பாள். இவ்வாறு அந்தவீட்டில் அவர்களிருவரும் எப்பொழுதும் கீரியும் பாம்பும் போல் ஒருவர்க்கொருவர் ஓயாமல் சண்டையிட்டவண்ணமாயிருப்பர். கொழுநனும் மனைவியும் ஒருவர்க்கொருவர் அன்பாயிருத்தலினால் இம்மை மறுமை இரண்டிடங்களிலும் இன்பம்பயக்கும். ஒரு சிலர் கலியாணஞ் செய்துகொண்ட புதிதில்மட்டும் மனைவியுடன் கொஞ்சிக் குலாவி இருந்துவிட்டு, பிறகு மனைவி எழில் குறைந்தபின் அவளை வெறுக்கின்றனர். இதைவிட நன்றிகெட்டதும், மானக்கேடானதும் வேறொன்றுமில்லை.

மனைவி செய்யும் பணிவிடைகளைக் கண்டு கணவன் மகிழ்ச்சியடைய வேண்டும். நாம் பிறருக்கு நன்மை செய்யும் போது அவர்கள் மகிழ்ந்து புகழ்ந்தால் அதனால் நமக்கு மகிழ்ச்சியுண்டா கின்றதல்லவா? அவ்வாறே மனைவி நமக்கென்று எவ்வளவோ அன்பாகச் செய்யும் காரியங்களைக் கண்டு மகிழாவிடில் அவள் மனம் எப்படி வருந்தாதிருக்கமுடியும்? இதனால் மனைவியை தோத்திரம் பண்ணுவதென்று பொருளல்ல; அவளை குளிர்ந்த முகத்துடனே பார்ப்பதுவே போதும். ஒரு சமயத்தில் மனைவி மறதியாலேயோ அயர்வினாலேயோ செய்யவேண்டியவற்றைச் செய்ய தவறிவிட்டால் அதற்காக பிரமாதமாகக் கோபிக்கக் கூடாது.. கணவன் மனைவியர்க்குள் யாருக்கேனும் எப்பொழுதாவது கோபமுண்டானாலும், "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்றபடி இருவருள் ஒருவர் எதிர்பேசாமல் ஒதுங்கிப்போவதே சாலவும் நன்றாகும். மனைவி விடியற்காலையிலிருந்து மிகவும் பாடுபட்டுச் சமைத்து கணவன் மறுக்காமல் சாப்பிட்டால் போதும்என்ற மெய்யன்புடன் அன்னத்தையும் கறி காய்களையும் படைத்தால், உணவில் சிறிது ஏறத்தாழ இருக்கினும் அந்தக் குற்றங்களைக் கோபமின்றி எடுத்துச் சொல்லவேண்டுமே யன்றி, "இந்தச் சாப்பாட்டை எந்தக்கழுதைதான் தின்னும்" என்று பலவாறு பேசி கடிந்து வைவது அழகன்று. சில ஆண்கள் மனைவியை தகாத வார்த்தைகளால் வைகின்றார்கள். இது வெறுக்கத் தக்கதாம். "மூதேவி" முதலிய அமங்கல வார்த்தைகளை உபயோகப்படுத்தக் கூடாது.

(தொடரும்).

248

உ

சற் குருவே துணை.

"நமது கடமை"

முதல் பொருள் வணக்கம்.

அகர மென வறிவாகி யுலக மெங்கு(ம்)
அமர்ந்தகர உகரமக ரங்கடம் மாற்
பகரு(ம்) ஒருமுதலாகி வேறுமாகிப்
பலவேறு திரு மேனி தரித்துக்கொண்டு
புகரில் பொருள் நான் கினையும் இடர்தீர்ந்தெய்தப்
போற்றுநருக் கறக் கருணை புரிந்து, அல்லார்க்கு
நிகரின் மறக் கருணை புரிந்து ஆண்டுகொள்ளும்
நிர்மலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்

சற்குரு வணக்கம்.

கல்லாலின் புடை யமர்ந்து நான்மறையா
றங்க முதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால் வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடரை வெல்வாம் !!

ஞானகுரு வணக்கம்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே !!!

மழை மகட் கினிய மாதாவாய் விளங்கும் நெடிய கடலால் புடைசூழப் பட்டது இந்நிலவுலகம். இவ்வுலகில் முற்படத்தோன்றிய நிலப்பகுதி,

"மத்திய ஆசியாவின் கண்ணேயுளது," என்பது நிலநூல் வால்லாரின் துணிவு. இவ்வுலகிலேயே முதன்மையாகத் தோன்றிய மத்திய ஆசியாவிலும் பண்டுமுதல் பல் வகை வளங்களிலும் சிறந்து விளங்கியது நம் செந்தமிழ் நாடேயாம். "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே." என வரகவி சுப்பிரமணியபாரதியார் உணர்ந்து உருகிப் பாடியவை என்றென்றும் உள்ளூற உணர்ந்து உருகி அனுபவிப்பதற்குரியதே! அம்மட்டோ?

> "ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
> வேதப் பொருளாய் மிக விளங்கித் தீதற்றோர்
> உள்ளுதோ றுள்ளு தோ றுள்ள முருக்குமே
> வள்ளுவர் வாய் மொழி மாண்பு."

என கடைத்தமிழ்ச் சங்கப்புலவரான மாங்குடி மருதனாரால், உணர்ந்து உருகிப்பாடியவை எதைக்குறித்தது? தெய்வபுலவரின் திருக்குறளைக் குறித்ததே யன்றோ? அத்திருக்குறள் நுட்பமான அணுவைத்துளைத்து மிகப்பெரியதாகிய ஏழுகடலையும் புகட்டி பார்ப்பதற்கு குறுகத்தரித்த குறளாகவும் தோன்றுகிற தன்றோ? இத்தகைய சீரும் சிறப்புமுடைய பொய்யா மொழி தோன்றுவதற்கு காரணமாகத்திகழ்ந்தது செந்தமிழ் மொழியே யன்றோ! இத்தகைய சிறப் புடைய நாட்டில் வாழ்ந்து அரசுபுரிந்த மன்னர் பாண்டியர், சோழர், சேரர் எனும் மூவேந்தராவர். அன்னவர்கள் தெய்வபக்தியில் சிறந்தும் ஒழுக்கத்தில் உயர்ந்து மிருந்ததுடன் தமிழ்ப்பற்றும் மிகவுடையராய்ப் பொலிந்தனர். அவர் களில் முன்னவராகிய பாண்டியர் தம் தலைநகரில் ஒன்றின் பின் ஒன்றாய் தமிழ் முச்சங்கங்களும் நிறுவி, தமிழாராய்ந்து வந்தனர்.

அரசர் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே யன்றோ! என்பதற் கிணங்க நம்முன்னோர்களும்,

> "அறத்தான் வருவதே யின்பம் மற்றெல்லாம்
> புறத்த புகழு மில."

எனும் பொய்யாமொழியை உணர்ந்து, அன்பர் பணியாகிய அற நெறியி லும்; ஆன்ம லாபத்திற் கின்றியமையாத ஆசார வொழுக்கத்திலும்." இல்லற வாழ்க்கைக்கு சிறப்பை யளிக்கும் இன்சொல் வழங்குவதிலும், "ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்! தாம் உடமை வைத்திழக்கும் வன்கணவர்." என் பதின் பொருளை உணர்ந்து ஈவதிலும், உத்தம நெறியாகிய உண்மை நெறியில் உறுதியாய் நிற்பதிலும், எல்லாம் வல்ல இறைவனை திரிகரண சுத்தியுடன் ஏத்திப்போற்றி அவனருளுக்குப் பாத்திரமானவர் களாவதே தம் வாழ்க்கையின் நோக்கமாகக் கருதி வாழ்ந்துவந்தனர். மெய்யன்பர்கள் கருதியவற்றை அவரவர் கள் பரிபக்குவத்திற்கு தக்கவாறு அருள்பாலிக்கும் கருணை நிதியும் அவர்கள்

ஒழுக்கத்திற்குத் தக்கபடியே நோயற்ற வாழ்வும் மனக்குறைவற்ற செல்வத்தையும் அருள் பாலித்து வந்தனர். நம்முன்னோர்களாகிய பழந்தமிழ் மக்கள் மிக்க மதியூகிகள் ; சூட்சும புத்தியினர் ; சிவஞான போதம் அடைவதின் பொருட்டு தமிழ்வேதம் முதலியவற்றை நன்கு ஓதி உணர்ந்து அதன்படியே ஒழுகி மேன்மையடைந்தவர் ; வருங்காலபலனையும் யூகித்தறியும் நுட்பமதியினர் ; அஃதுடன்,

"தோன்றின மறையும் ; மறைந்தன தோன்றும் ;
பெருத்தன சிறுக்கும் ; சிறுத்தன பெருக்கும்.

எனும் தத்துவங்களையும் நன்குணர்ந்தவர்கள் ; ஆகையால், தம்பின்னோர்கள் காலசக்கரவசத்தாலும் ; சகவாச தோஷத்தாலும் ஆன்மார்த்தத்தையே தம்பிறவியின் நோக்கமாகக்கொண்ட மேற்கூறிய உயர்நெறியினின்றும் தவறவோ பிரளவோ நேரிடுமென்பதையும் உணர்ந்து ஆன்மார்த்தத்திற்கு அடிப்படையான, பழக்கவழக்கங்களையும் இயம நியம முதலான சுகாதார விதிகளையும் நம் லௌகீக வாழ்க்கையிலும் அன்றாடம் அனுட்டித்துவரும் படியாக மிகவும் சாதுர்யமாக புகுத்தியுள்ளனர். அதனால் தான் நாம் காலை எழுந்தது முதல் மாலைத்துயிலும்வரை அனுட்டிக்கும் ஒவ்வொரு நித்தியகருமானுட்டானங்களிலும் உயர்ந்த தத்துவங்களைக் கொண்ட பழக்கவழக்கங்கள் இயற்கையாகவே ஊறி குடிகொண்டிருக்கின்றன. இவை சற்று உற்றுநோக்குவார்கட்குத் தெற்றெனப்புலனாம்.

பழந் தமிழ் மக்களாகிய நம்முன்னோர் ஊகித்துணர்ந்தவை முற்றிலும் சரியாகவே முடிந்தது. காலஞ் செல்லச் செல்ல அரசபரம்பரையினர் தங்கடமையைச் சரிவரச் செய்யத்தவறினர். அரசர் எவ்வழியோ குடிகளும் அவ்வழியேயன்றோ ; மக்களும் ஆன்மார்த்தத்தை அடிட்டளை யாகக்கொண்ட, மறுமை இன்பத்தையே முதன்மையாகக் கொண்ட உத்தமபத்தி நெறியினின்று வழுவித் தன்னலத்தையே பிரதானமாகக் கொண்ட இம்மைக்கு இன்பமூட்டும் துறைகளில் மட்டும் விசேடகவனஞ் செலுத்தினர். அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமே நஞ்சாகுமன்றோ !

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்."

என்பது பொய்யா மொழியன்றோ ! அதன்படியே அரசர்தம் அரசுடன் வாழ்வையும் இழந்தனர் !! அந்தோ ! மக்களும் தம்நிலை இழந்து, அருள்இழந்து, நிதிஇழந்து, உயர்ந்ததமிழையும் மறந்து, கேவலம் துஷ்டமக்களைப் போல் வயிறு வளர்ப்பதற்காக தகாத உணவையும் உண்டு, அருந்தத் தகாதவற்றையும் மயக்கந் தரும் பொருட்டு அருந்தி, ஆசைஎனும் பாசத்தால் கட்டுண்டு சிற்றின்ப சாகரத்தில் உழன்று கேவலம் அடிமைவாழ்க்கைக்கு உள்ளாயினர்.

அருட்பெருங் கடலாகிய தலைவன் தன்னியல்பான தனிப் பெருங்கருணையால் ஆசாபாசத்தால் தன்னிலை இழந்தமக்கள் உய்யும் பொருட்டும், பத்தர்கட்கு அனுக்கிரகிக்கும் பொருட்டும் செந்தமிழை வளர்த்தற்பொருட்டும், தமிழ் சைவ குரவர்களாகிய, திருநாவுக்கரசரையும், திருஞானசம்பந்தரையும், திரு ஆலால சுந்தரரையும், திருவருளுடன் இரண்டறக்கலந்த மாணிக்கவாசகப் பெருமானையும் நந்தமிழ் நாட்டிற்கு அருளிச்செந்தமிழ் பொலியும்தேவார திருவாசகங்களை பாடுவித்து, ஆசார ஒழுக்க முறையும் பக்திநெறியையும் இனித ஊட்டினர். பின்னரும் சிறிதுகாலஞ் சென்ற பின்னர் மக்களின் நிலைமாறியது, ஒன்றைவிட்டு ஒன்று பற்றுவதே உறுதியற்ற மாந்தரின் இயல்பு அல்லவா ? ஆரியமொழி பரவியது. தன்மதிப்பும் தாய்மொழி மாண்புமற்ற பலர் ஆரியத்தையே சிலாகித்தனர், ஆரியமும்தமிழும் கலந்த மணிப்பிரவாள நடைபுகுந்ததுடன் மேன்மையும் பெற்று விளங்கியது. சமணரும் வைணவரும் அகங்காரம்கொண்டனர். அடாதபாவகாரியங்களும் செய்தனர். இறைவன் கருணையுடன் செந்தமிழை வளத்தற் பொருட்டும், மேற்கூறியவர்களின் அகங்காரத்தை தளர்த்தற்பொருட்டும் மக்களிடம் பழக்க வழக்கத்தாலும் சகவாசதோஷத்தாலும் ஏற்பட்ட குற்றங்களையும் குறைகளையும் இன்னதென்று எடுத்துக்காட்டி அகற்றும் பொருட்டும், முத்திக்கு வித்தாகிய பத்திநெறியுடன் மணிப்பிரவாளத் தமிழையும் வளர்த்தற் பொருட்டும் திரு அருணகிரிநாதரை திருவருளால் பிறப்புவித்தனர். அம்மட்டோ ? முன்னர் திருநாவுக்கரசர் சகலகலை விற்பன்னராக விருந்துங்கூட திருவருள் "இல்லாமையால் புறச்சமயமாகிய சமண மதத்தில் இறங்கி உழன்றமையால் முத்திக்கு வித்தாகிய உயரிய பக்தி நெறிக்கு திருவருள் பிரதானமேயன்றி சாமானிய ஏட்டின் கல்வி முக்கிய மன்று, என்னும் உண்மையை நம் போன்ற மக்கட்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டி உணர்த்துவான் வேண்டி திரு அருணகிரிநாதருக்கு ஆரம்ப கல்வி வாசனை ஏறவிடாது தடுத்து சிற்றின்ப கடலில் தத்தளிக்க விடுத்து ; அதனின்று கரை யேற்றும் பொருட்டு வறுமையுடன் பிணியையும் கொடுத்து, அதன்மூலமாய் ஏற்பட்டுள்ள வைராக்கியத்தின் மூலமாய் முன்னுள்ள ஆசாபாசவினையை முடித்து, உயிரைவிடத் துணிந்தபோது அவரை அடுத்து, கீழேவிழாமல் தடுத்து, "சும்மாயிரு சொல்லற," என்னும் மந்திரோபதேசங்கொடுத்து, பழவினையை ஓட்டும்படியாகவும் "நம் போன்றோர் ஒழுக்கயீனங்களை வாட்டும் படியாகவும்," முத்திக்கு வித்தாகிய பக்திநெறியை ஊட்டும்படியாகவும் ; திருப்புகழ் பாடுதி என அருளினர், நம் ஆறு ஆதாரங்கட்கும், ஆதாரமாகவும், உயிருக்கு உயிராகிய ஒளியாகவும், அறிவிற்கு அறிவாகிய ஞானமூர்த்தி ; அவ்வாறு அருளியதுடன்.

"முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபரன் எனவோதும்."

என்று முதல் அடியும் எடுத்துக் கொடுத்து அருளியவுடன் திரு அருணகிரிநாதர் "கடல் மடை திறந்த வெள்ளம்போல உலகியலை உள்ளபடி வெள்ளிடை

மலைபோல விளக்கி பக்திரசம் நனி சொட்டச் சொட்டப் பாடியதிருப்புகழின் பெருமையையும் அதிற் பொதிந்துள்ள உள்ளக்கிடக்கையை ஒன்றும் உண்மை யறிய இயல்பிலாத அடியேனைப் போன்ருர் அறிவது எங்ஙனம் ?

" பொருப்பது பொடிபட விடுத்திடு கைவேலா
இருப்பிட முனக்கெது எனக்கருளியம்பாய் (என கேட்ட அன்பருக்கு)
உருக்க நல் விழுக்குல மொழுக்க மிலரேனும்
திருப்புகழ் படிப்பவர் மனத்தினி லிருப்பாம்."

எனப்பதில் கூறிய செய்யுளில், எத்தகையராயினும் "உருக்கமாகத் திருப் புகழ் படிக்குங் காலத்தில்" அவர் மன மானது புத்தியில் ஒடுங்கி புத்தி அறிவு மயமாவது திண்ணம் என அறியக்கிடக்கின்றது.

" வாக்கிற் கருணகிரி வாத வூரார் கனிவில்
தாக்கிற் றிருஞானசம்பந்தர்---நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்திற்குச் சுந்தரனுர்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல்."

என்னும் செய்யுளால் திரு அருணகிரிநாதரின் அருள்வாக்கு வன்மைபுல னும். திரு. அருணகிரிநாதரின் அருள் வாக்கின் உண்மையைப் பற்றி சிவஞான சித்தியார் அருளிய மெய்கண்டதேவர் மாணக்கர் பரம்பரையில் வந்த திரு தாயு மான சுவாமிகளே ;

" ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர் சொல் விளம்பினர்யார்---வையகத்தோர்
சாற்றரி தென் றேசற்ருர் தன்னையாய் முக்க ணெந்தை
நாற்றிசைக்கும் கைகாட்டினுர்."

எனக் கூறினுர் எனின் திருப்புகழின் பெருமையை நம்போன்ருர் உணர்ந்து ஒழுகுவது நம்கடமை யன்ருே.

இத்தகை சீரும் சிறப்பும் தெய்வீகமும் பொருந்திய திருப்புகழுக்கு இயன்ற வரை உரை எழுதும் நோக்கத்துடன் "திருப்புகழ் அமிர்தம்" எனும் மாதசஞ்சி கையை வெளியிடும் தொண்டை மேற்கொண்டனர் எமது அன்பர் திரு கிருபானந்தவாரியார் ஷை திருப்புகழ் அமிர்தத்திற்கு கட்டுரை எழுதவேண்டு மென சென்ற திங்களில் அடியேனை விரும்பினுர். அக்காலை உடனிருந்த அன்பரும் தவணவருமாகிய திருமதுசூதனர் சுகாதார விதிகளைப்பற்றி எழுத வேண்டுமென விரும்பினர். ஒன்றுக்கும் பற்ருத அடியேனே! சுகம் என்ருல் என்ன, அதற்கு ஆதாரம் இன்னது என்பதையே பல கால் சிந்திக்கினும் நன்கு தெளிவுருத சிற்றுயிர் ! மிகப்பெரிய அக்கடமையை மேற்கொண்டு எழுத நினைப்பது தகுமோ என்று அஞ்சுகின்றேன் "சும்மா இருசொல்லற" என திரு. அருணகிரிநாதருக்கு நம். அறிவிற்கு அறிவாகிய மூர்த்தியும் கூறியுளார். திரு. தாயுமான சுவாமிக்கு திருமூலர் மரபில்வந்த மௌனகுருமூர்த்தியும் அவ்

வாறே "சும்மாயிரு" என உபதேசித்த இன்னுரையையும் சிறிது கேள்விப் பட்டதுடன் திரு. தாயுமான சுவாமிகளும்,

கந்துக மதக் கரியை வசமாய் நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையும்
கட்டலாம் ஒருசிங்க முதுகின் மேற் கொள்ளலாங்
கட்செவி யெடுத்தாட்டலாம்

வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத்தில் உலாவலாம்
விண்ணவரை ஏவல் கொள்ளலாம்

சந்ததமு மிளமை யோடிருக்கலாம் மற்றொரு
சரீரத்திலும் புகுதலாம்
சல மேல் நடக்கலாம் கனல்மே லிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்

சிந்தையை யடக்கியே 'சும்மா' யிருக்கின்ற
திற மரிது சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட 'அறி' வான
தெய்வமே தேசோமயானந்தமே.

எனக்கூறிய பொன்மொழியை உற்று நோக்கிய சிற்றறிவுடைய அடியேன் முற்றும் உணர்ந்தவர்போல் பிதற்றிஎழுத முன்வருதல் தகுமோ என அஞ்சுவது இயற்கையேயன்றோ! அது நியாயமுமன்றோ! ஆதலால் பேரன்புடைய பெரியோர்கள் இன்னது செய்கவென அருளும்பட்சத்தில் திரு. மாணிக்கவாசகர் அருளிய."

"என் கடன்பணிசெய்து கிடப்பதே."

"அன்பர்பணி செய்ய வெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே."

எனும் தாயுமான சுவாமிகள் திருவாக்கின் கருத்தையும் இயன்றவரை சிந்தித்து உணர்வாம்.

"அடியார்க்கடியான்."

பெருங்குளம் எஸ். பி. தேசிகர்,
சென்னை.

---(தொடரும்).

254

ஓம் குஹாய நம:

யோக சூத்திரம்

பதஞ்சலி முனிவர்.

ஆர். வேங்கடநாராயண சர்மா, வைத்தியர்.

பொத்தனூர்-வேலூர், சேலம் ஜில்லா.

" யோகியருக்கே ஞானமொழுங்காம் பராபரமே. "

(185-வது பக்கத் தொடர்ச்சி).

முன்னுரை.

ஆஸ்திக சிகாமணிகளிலநேகர், மிகப் பிரசித்தமான இந்த யோகநூலைப்பற்றி அறிந்திருக்கிறார்கள். சரியை, கிரியை, யோகம் ஞானம் என்ற நாற்படிகளில் யோகமானது, ஞானத்தையுண்டாக்குவதாய் ஞான விளைவாயிருப்பதால், பல பெரியோர்கள் இந்த யோகசூத்திரத்திற்கு விரிவுரை வரைந்துள்ளார். ஆஸ்திகர்களின் நோக்கம், அருள் நோக்கமாகையால் இதைப்பற்றித் தெரிவித்துக்கொள்ள வேண்டிய விஷயம், சிறப்பாகவே அவர்கள் உள்ளத்தில் விளங்குவது திண்ணம். ஆயினும் தமிழன்பர்களின் சிந்தனைக்கு உரித்தாக அடியார்களை வணங்கி இது எழுதப்படுகிறது. உலகம்பிழை பொறுக்கப் பிரார்த்திக்கிறேன்.

சமாதி பாதம், சாதனபாதம், விபூதிபாதம், கைவல்லிய பாதமென தர்மதேவதையான காமதேனுவைப்போல 4 பாதங்களையுடைய இந்நூல் பேணத்தக்கது.

எவர் ஆதியிலுள்ள ஆதிசேஷ ரூபத்தைவிட்டு பதஞ்சலி முனிவராகி உலகிற்கு அநேகமான உதவிகளை உதவ வல்லவரோ, அவித்தையாதி கிலேசங்கள் முற்றும் எவர் இல்லாதவரோ, பயங்கரமான விஷயத்தையுடைய வெகுதலைகளையும், வெண்மையும் தூய்மையுமான உடலையும், சிறந்தபோகத்தையும், உடையவர்

எவரோ, எல்லா ஞானத்திற்கும் இருப்பிடமானவராயும், நற்கதி பெற விரும்புகிற பாம்புக்கூட்டங்களாகிற பரிஜன பக்தர்களால் வணங்கப்பட்டவராயும், யோக நூலை வெளியிட்டவரும், யோகத்தை அனுஷ்டிப்பவரும், ஸர்ப்பங்களுக்கரசனுயு முள்ளவர் எவரோ, ஆதிசேஷனுன அவர் என்றும் உங்களைக் காப்பாற்றட்டும்.

1. பழமையான மங்கள யோகம் தொடங்கப் படுகிறது.

2. யோகம் எனபது சித்தத்தின் எண்ணங்களை நிராகரித்தலாம்.

3. அப்பொழுது காண்கிறவன், (ஜீவன்,-உயிர்,-தான்) தன் இயற்கை நிலையில் (தன் ஸ்வரூபத்தில்) இருக்கலாகும்.

4. யோகமில்லாத மற்றக்காலங்களில் எண்ணங்களின் உருவமுடையவன் போலாவான்.

5. எண்ணங்கள் ஐந்துவகை; சில துக்கமானவை; சில சுகமானவை.

6. அவை, பிரமாணம், விபர்யயம், (கானற்சலம்) விகற்பம் (முயற் கொம்பு) நித்திரை, ஸ்மிருதி (நினைவு) என்பன.

7. பிரத்தியக்ஷம் (காட்சி) அனுமானம் (யுக்தி) ஆகமம் (நூல்) எனப்பிரமாணம் மூன்று வகைப்படும்.

9. விபர்யயம் என்பது, ஒருபொருளின் உண்மை நிலையை அறியாது பொய்யாக அறிதலாம். (கானலை ஜலம் போல அறிவது).

9. விகற்பம் என்பது, சொல்மாத்திரத்தில் மனதில் தோன்றும் தோற்றமேதவிர, உண்மையில் சொல்லுக் கேற்ற பொருளில்லாத தாகும். (முயற் கொம்பு-மலடிமகன் போன்றன).

10. எண்ணங்கள், இந்திரிய சம்பந்தங்களிலிருந்து நீங்கி, அவித்தையான -தமோகுணத்தை விஷயமாகக் கொண்டபிடிப்பின் நிலைக்கு நித்திரை யென்று பெயர்.

11. அனுபவித்த விஷயங்கள் மனதைவிட்டு நழுவாம லிருப்பதற்கு "ஸ்மிருதி" என்று பெயர்.

12. மேற்கூறிய எண்ணங்களை அப்பியாசத்தாலும் நிராக ரிக்கவேண்டும்.

13. இந்திரிய விஷய எண்ணங்களா லறியமுடியாத-தன் இயற்கை நிலையான சாக்ஷி புருஷனிடத்தில் மனதை நிலைக்கச் செய்யும் முயற்சி அப்பியாச [illegible]தும்.

14. நீண்டகாலம் இடைவிடாமல் யோக சாதனங்களைப் பழகி வருவதால், மனம் திடமாகிறது.

15. கண்ணுற் காண்கிற சுகவிஷயங்களிலும், காதாற் கேட்கப்படுகிற பரலோக சுவர்க்காதி சுகங்களிலும் ஆசையற்று, மீண்டு மொருகாலுங் கருதாத சுவாதீன நிச்சயபுத்தியே அதாவது அடையாளமே வைராக்கியமாகும்.

16. குணங்களின் பற்றுதல் நீங்கி, புருஷ ஸாக்ஷாத்கார நிலைக்குப் பரவைராக்கிய மென்று பெயர்.

17. விதர்க்கம் (ஸ்தூலம்) அஸ்மிதை (பிரஞ்சை) இவற்றை உருவகமாய்க் கொண்ட தியானம் ஸம்பிரக் ஞாத சமாதியாகும்.

18. மனச்சஞ்சலமற்ற, முன்கூறிய பரவைராக்கிய அப்பியாசத்தால், அஸம்பிரக்ஞாத ஸமாதி கூடுகிறது. (ஆனால்) இதில் பூர்வஸம்ஸ்கார (ஊழ்) சேஷம் மாத்திரமுள்ளது.

19. இந்த அஸம்பிரச்ஞாத சமாதி சித்திக்காவிட்டால், பவப்பிரத்யயம் என்ற, அதாவது அவித்யையை மூலகாரணமாக வுடைய தேகமற்ற தேவர்களின் நிலைகளையும், பிரகிருதிலய நிலையையுமடையச் செய்கிறது. (இந்த உயர்ந்த உலகங்கள் அநித்தியமானவை என்பது சித்தாந்தம்.)

20. வேறான யோகிகள் (மேலான-முயலும் யோகிகள்) சிரத்தை (பேராவல்) வீர்யம், (தாரணை) ஸ்மிருதி தியானம்) சமாதிகளோடு பிரஞ்சையை முன்னிட்டு மோக்ஷமடைகிறார்கள்.

---(தொடரும்).

---

2 5 1

ஓம் குஹாய நம :

குமரகுருபர ஸ்வாமிகள் சரித்திரம்.

எ. எம். நாராயணசாமி அய்யர், மதுரை.

(226-ம் பக்கத் தொடர்ச்சி.)

அறிவாசிரியரைக் காணும் ஆர்வம் மேலிட்ட அடிகள் சின்னாட்கழிந்து அரசனிடம் சென்று தமது விருப்பத்தைக் கூறி அரசனை விடைகேட்க, அரசனும் மிகுந்த வருத்தத்துடன், ஒருவாறு மனம் இசைந்து, நல்லதோர் நாளில் அடியாரைச் சிவிகையிலேற்றி பலவரிசைகளும் வழங்கி, பல்லியம் முழங்க சகல பரிவாரங்களுடனும் பின் சென்று விடை கொடுத்தனுப்பினான்.

மூவாண்டில் முக்கண்ணியின் முலைப்பால் அருந்தப் பெற்று முதிர் ஞானம் பெற்ற திருஞான சம்பந்த மூர்த்தியைப் போன்று ஐந்தாண்டில் அறுமுகக் கடவுளின் அருட்பாலருந்திய நம் அடிகள், அறிவாசிரியரைத்தேடுவான் வேண்டி செம்பொற்சிவிகையேறி, சின்னம் முழங்க குடை நிழற்றப்பட பரிஜனத்துடன், திரிசிராப்பள்ளி, திருவானைக்கா, வாட் போக்கி, சடப்பந்துறை, ஈங்கோய்மலை, திருப்பராய்த்துறை, திருப்பாச்சிலாச்சிராமம், திருபைஞ்ஞீலி, திரு மூக்கீச்சுரம், திருக்கர்குடி, திருவெறும்பியூர், திருகாட்டுப்பள்ளி, திருச்காணூர், திருமழபாடி, திருநெய்த்தானம், திருவையாறு, திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருப்பழனம், திருகுடந்தை, திருவிடைமருதூர், முதலிய திருத்தலங்களில் கோயில் கொண்டருளிய கறைமிடற்றண்ணலையும், அவர்தம் மிடப் பாகத்தமர்ந்த தேவியாரையும், தரிசனம் செய்து அருள் பெற்றுக்கொண்டு பிறக்கமுத்திதரும் திருவாரூரை அடைந்தார்.

பின்னர் தேமலி பொழிலாரூரில் செம்பொற் சிங்காதனத்தில் கோமள வல்லியோடும், கோதைவேற் குமரனோடும் நாம நீருலக முய்ய நண்ணி வீற்றிருக்கும் கண்ணிய மூர்த்தியாம் தியாகேசப் பெருமானைக் கண்டு தரிசித்து. "ஏ! தியாகேசப் பெருமானே!

"கூற் றெனப் பெயரிய கொடுந் தொழிலுவளைய
னூற்ற மில் யாக்கை யுவர் நீர்க் கேணிப்
புலத்தலையுயிர்மீ னலைத்தன்ன பிடிப்ப
வைவளி பித்தென வமைத்து வைத்திருந்த
முத்தலைத் தூண்டி லூண்டியத்தலை
வாழ் நாள் மிதப்ப நோக்கித்தாழா
தயிறலைத் தொடங்கி யெயிறலைத்திருத்தலிற்,
றள்ளா முயற்சி தவ றுபட்டொழிந்தென
வென்குறீஇ மற்றவன் விம்மிதனுக
வருட் பெருங் கடலினவ்வாருயிர் மீனங்
கருக்குழி கழியப் பாய்ந்து தெரிப்பரும்
பரமானந்தத் திரை யொடு முலாவி
யெய்தரும் பெருமித மெய்த
வைய நின் கடைக்க ணருளுதி."

இயமனாகிய வலைஞன் உவர் நீர்க் கேணியாகிய நிலைபேறில்லாத இச்சடலத்தின் கண் உயிர்களாகிய மீன்களைப் பிடிப்பதின் நிமித்தம் கபம், வாதம், பித்தம், என்னும், முச்சாரமுள்ள, தூண்டிலை யாக்கையாகிய கேணியில்இட்டு மீன் தூண்டில் அகப்பட்டதை உணர்த்தும் வாழ் நாட்கு எல்லையாகிய சடைக் கருவியைக் குறி கொண்டு பார்த்து, சற்றும் தாமதியாமல் மீனை எடுத்து தின்பதற்கு பல்லினை அசைத்துக் கொண்டிருக்கின்றான். ஆதலின் தவறாத தனது முயற்சியானது, தவறுற் றழிந்தது எனக்கருதி வெட்கமடைந்து அவ்வலைஞனாகிய இயமன், ஆச்சர்யமுற்றவனாய் நிற்க; நின் அருளாகிய பெரியகடலில் அந்த அரிய உயிர்களாகிய மீன்கள் பிறவியாகிய குழி ஒழியும்படி தாவிப்பாய்ந்து தெரிதற்கரிய பரமானந்தமாகிய அலையுடனே தடையற உலாவி அடைதற்கரிய பெருமிதத்தை அடைய நின் கடைக்கண் நோக்கம் அருளுவாயாக. நமது அடித்தொண்டு பூணும் பேற்றுக்குஉரியன் அல்லனெனினும் உமதுதிருவடிக்கு

தொண்டு பூண்டோழுகும் தொண்டரது சார்பு பெற்று உய்தலி னல், அறியாத் தன்மையுடைய எனது துன்பத்தை ஒழிப்பது நும் கடன் என்று அறிந்திருக்கின்றீர். அங்ஙனம் அறிந்து துன் புடைய கொடிய பிறவியால் வருந்தி சோர்வேனுகிய எனது துயரை ஒழித்து அருளுகின்றிலீர். ஆதலால் என்னைப்புறக்கணித் திருந்ததை யோசிக்குமிடத்து, பிறவியெடுத்துழலும், திருமால் முதலோர்களல்லாமல் பிறவியின்துயர் நமக்கு இல்லையாதலின் எனக்குத் திருவருள் செய்யாதொழிந்தீர் போலும்? நீவிர் கருணை யின் பொலிந்த கண்ணுதலானன்றே? உம்மைக்கல்லால் எறிந்த சாக்கிய நாயனுர்க்கு இடபாரூடராய் காட்சி நல்கினீர்.

கண்ணப்பர் செருப்பணிர்ந்த காலுதைக்கு செம்மாந்தும், இறுமாந்தும் இருந்தீர். தொல் புகழ் விஜயன் வில்லடி பொறுத் தீர், அருந்தமிழ் உணர்ந்த பாண்டியன் பிரம்படிக்கு உவந்தீர். நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான் தள்ளாக் காதல் தணித் தற்கு, பரவைவாயிலிற் பதமலர் சேப்ப வொருகாலல்லவிரு கால் நடந்து எளியவர்களுள்ளும் மிக்க எளியவர் ஆயினீர். அந்தோ! ஏ! கமலேசப் பெருமானே; அடியேன்பாலும் சற்றே அன்புகூர்ந்து அறிவாசிரியரை அடைந்து உய்யும்வகை அருள் செய்வீராக" எனப்பன்முறைவேண்டி அவர்திருவடிகளில் திருவா ரூர் நான்மணி மாலை என்ற பாமாலையைச் சாத்தி அல்லும் பக லும் இடைவிடாது திருமாலும் தேடிக்காணமுடியாத திருவடி யை[illegible]வதியாகக் கொண்டு திருவாரூரில் சிலகாலம் தங்க லானுர்.

அவ்வமயம் அன்பர்கள் சிலர் குமரகுருபரரிடம் வந்து "அண்மையிலுள்ள தருமபுரம் என்ற திருப்பதியில் ஞனசம்பந்த தேசிகர் என்பவரால் ஏற்படுத்தப்பட்ட தருமபுர ஆதீன மடத் தில் நான்காவது குருவாக பட்டதுக்கு வந்திருக்கும் மாசிலா மணி தேசிகர்,

வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான்யாறன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந்தன்ன நலம்பட ரொழுக்கமும்
திங்களன்ன கல்வியுந் திங்களோடு

ஞாயிறன்ன வாய்மையும் யாவது
மஃகாவன்பும் வெஃகாவுள்ளமும்
தலைநாவன்ன சமநிலையுள்பட
வெண்வகை யுறுப்பின ராசித் திண்ணிதின்
வேளாண்வாழ்க்கையும் தாளாண்மையு
முலகிய லறிதலு நிலை இய தோற்றமும்
பொறையு நிறையும் பொச்சாப் பின்மையும்
அறிவு முருவு மாற்றலும் புகழுஞ்
சொற்பொருளுணர்த்துஞ் சொல்வன்மையும்
கற்போர் நெஞ்சங் காமுறப்படுதலும்
இன்னோரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பி னல்லாசிரியர்

என்னும் அவர்தம் பெயருக்கு இயைய மாசு இலா மணியாக வே திகழ்வதாகவும், ஓர் ஞானாசிரியருக்கு வேண்டிய சீரிய குணங்கள் யாவும் அவர்பால் கூடி இருப்பதாகவும், இன்று உலகை உய்விக்க ஈசனே மானிடச்சட்டை தாங்கி மாசிலாமணி தேசிகராக வந்து தோன்றி யுள்ளார் என்று கூறினும் மிகையாகாது" என்று புகழ்ந்து கூறினர்.

"நெருப்பு வழிநடப்பி னீர்தேடு வார்போற்
கருப்பி லனந்தேடுங் கதைபோல்---விருப்புற்றுப்
டக்நவத்து நாயகனைத் தேடுகின்ற பைந்தொடிபோற்
சற்குருவைத் தேடுந் தரம்,

என்றவாறு தமக்கு எப்பொழுது குருநாதன் கிடைப்பான்; எங்கே அவரை எப்போது காணக்கூடும்? என்று எப்பொழுதும் குருநாதன் ஞாபகமாகவே கோடைக்காலத்துப் பயிர்கள் மழையை எதிர்பார்ப்பதுபோல் குருநாதனை எதிர்பார்த்திருக்க, நம் குமாரகுருபரர் அன்பர்கள் வாயிலாக மாசிலாமணிதேசிகரது பெருமையைக் கேட்டலும், அன்னவரை அப்பொழுதே காணவேண்டுமென்ற அவாமிக்குடையராய், உடனே பரிஜனங்கள் பின்தொடர, ஆலயம் சென்று வீதிவிடங்கப் பெருமானைக் கண்டு தெரிசித்து அவர்பால் விடை பெற்றுக்கொண்டு சிவிகையூர்ந்து தருமபுர ஆதீனத்தையடைந்தார்,

---(தொடரும்).